[1987 ஏப்ரல் 23

மண்டபம் பகுதியில் பெட்ரோல் ஊற்று.

460—(*வினா எண். 6928) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபம் பகுதியில் பெட்ரோல் ஊற்று கண்டறியும் சோதனை நடத்த அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சோதனையின் முடிவு யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உச்சிபுளி 1 என்ற இடத்தில் துளையிடும் பணி தொடங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அங்கு துளையிடும் பணி 1987-88ல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல் ஊற்று கண்டறியும் கிணறுகள் அதிக அளவில் தோண்டுவதற்கு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா? அதைத் தீவிரப்படுத்தவும் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாநில அரசு இப்போது அல்ல, 1957-ஆவது ஆண்டிலேயே அறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் நின்ற காலத்திலேயே தென்னகத்திலே இருக்கிற காவிரி வட்டப்பகுதிகளில் எண்ணெய் எடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளை மத்திய அரசுக்கு வைத்தார்கள். அதிலிருந்து இன்று வரை எல்லா இடங்களிலும் எண்ணெய் எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி அருகே கோயில்களப்பால் என்ற இடத்தில் தினந்தோறும் 35,000 லிட்டர் பெட்ரோல் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கிணறு தோண்டுவதற்கு எவ்வளவு செலவாகிறது? இது தஞ்சைப் பகுதிக்கும், மண்டபம் பகுதிக்கும்—இங்கே பெட்ரோல் கிடைக்கின்ற காரணத்தால்—இரண்டிற்கும் மத்தியில் சுத்திகரிப்பு ஆலை வைப்பதற்கு அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோயில்களப்பால், நரிமணம் ஆகிய பகுதிகளில் எண்ணெய் எரிவாயு தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது உண்மை. ரஷ்ய

1987 ஏப்ரல் 23]

நாட்டு நிபுணர்கள், அதிலே நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். எவ்வளவு செலவாயிற்று என்ற தகவல் மத்திய அரசிற்குத்தான் தெரியும். அதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால், அந்தத் தகவலை அரசு சொல்ல இயலும்.

அண்ணா மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் வெள்ளைக்கல்

461—(*வினா எண் 9276) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வெள்ளைக்கல் (Q artz) கிடைப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அரசே எடுத்து ஏற்றுமதி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

(ஆ) அண்ணா மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் கிடைக்கும் வெள்ளைக் கற்களை அரசு நிறுவனமாக தமிழ்நாடு கனிம நிறுவனம் பயன்படுத்தி தொழிற்சாலை அமைக்க திட்ட மிட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியில் ரங்கமலை பகுதியிலும், ஐயலூர் மலைப் பகுதியிலும் கிடைக்கும் குவார்ட்ஸ் என்ற கல் மிக உயர்ந்த ரகம் என்று சொல்லுகிறார்கள். தமிழகத்திலே இருந்து ஏற்றுமதியாகக் கூடிய இந்த கல்லுக்கு ஜப்பான் கம்பெனி களில் தேவை அதிகம் என்று சொல்லுகிறார்கள். இதை 'டாமின்' அரசு நிறுவனம் ரிசர்வ் செய்து வைத்திருக்கிறது. தொழிற் சாலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே ஏற்படும் காலதாமதத்தால் தனிப்பட்ட முறையில், 'இல்லீகல் மைனிங்' நடக்கிறது. தெரியாமல் திருட் டுத்தனமாக எடுத்துக் கொண்டு போகும் நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? தவிர, இது மிகுந்த பரப்பிலே இருக்கிறது. அரசே செய்ய முடிய வில்லை என்றாலும் உயர்ந்த அளவிலே குத்தகைத் தொகை விதித்து தனிப்பட்டவர்களுக்கு குத்தகை கொடுக்க அரசு பரி சீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.